முருகப்பெருமான் துணை

# மகான் அதிபத்த நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

14.11.2021, ஞாயிற்றுக்கிழமை

1. அருட்குருவாக ஞானம் அருளும்
ஆறுமுக அரங்கமகா ஞானியே
அருட்சுடராம் சரவண சோதி வழிபாடு
ஆற்றல்பட உலகமெங்கும் நடந்திட
2. நடந்திட ஞான வழிகாட்டும் அரங்கனே
ஞானியே உன் பெருமை கூறி
தடையற ஞானிகளை தொடர்ந்து
தவராசனுக்கு அறுபத்து மூவர்கள் தானும்
3. தானுமே துல்லிய ஆசி உரைப்போம்
தக்கதொரு பிலவ துலை திங்கள்
ஞானம்பட எழுநான்கு திகதி கதிர்வாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 28ம் நாள், 14.11.2021 ஞாயிற்றுக்கிழமை)
நாயன்மார்களுள் அதிபத்தர் யானும்
4. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான சைவநெறி போற்றும்
ஞானபூமியாக உலகம் மாறிட
ஞானிகளும் மகா சக்திகளும் இணைந்து
5. இணைந்துமே சன்மார்க்கமெனும்
இணையில்லா ஆற்றல் தந்துவர
துணையாக ஈசன் உமைபட
தேசிகனுள் ஆறுமுகனார் இருக்க
6. இருக்கவே ஏழாம்படை வீடு
எங்களின் ஞானவீடு ஆகும்
கருத்தாக பிரணவக் குடிலெனும்
கந்தகோட்டம் வணங்கி வர
7. வருகவே மக்களிடை மாற்றம்
வள்ளல் தன்மையாக காணும்
தரும குணமும் தயவு நெறியும்
தக்க அணிகலன்களாக பெருகி
8. பெருகியே உலக சேமம் வழி
பிசகில்லா சேவை ஆற்றும்
முருகப் பெருமான் அருள்தயவை
முழுமை ஞானமாக அடைந்து
9. அடைந்துமே அகில மக்கள்
அரங்கன் காட்டும் ஞானமாக
தடையறத் தொடர்ந்து வந்து
தவநிலை கூடி ஞானவான்களாவர்

10. ஆவரே அரங்கன் தேடலில்
அனைவரும் தேற்றம் கண்டு
புவனம் ஆளும் சக்திகளாக
புண்ணியவான்கள் தலைமைகளாகி

11. ஆகியே ஞான ஆட்சியாம்
ஆறுமுகன் ஆட்சி உலகினில்
மகிழவே மக்கள் பாதுகாப்புற
மண்ணுலகம் ஞானலோகம் ஆகும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–